செய்தி வெளியீடு எண். 139 நாள். 12.03.2018

**கூட்டுப்பண்ணையம் திட்டத்தில் 56 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ. 2.80 கோடி வேளாண்மை இயந்திரங்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

உணவு தானிய உற்பத்தி இரண்டு மடங்கு பெருகவும் அதன் மூலம் விவசாயிகளின் வருமானம் மூன்று மடங்கு அதிகரிக்க செய்யும் வகையில் அரசு பல்வேறு வேளாண் நலத் திட்டங்களை விவசாயிகளுக்கு அளித்து வருகிறது. தற்போது கூட்டுப்பண்ணையம் திட்டம் அறிவிக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ் திருவள்ளுர் மாவட்டத்திற்கு வேளாண் துறை மூலம் 225 உழவர் ஆர்வளர் குழுக்களும். தோட்டக்கலை துறையில் 55 உழவர் ஆர்வளர் குழுக்களும் ஆக மொத்தம் 280 உழவர் ஆர்வளர் குழுக்கள் உள்ளடங்கிய 56 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் திருவள்ளுர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு ஒரு உழவர் உற்பத்தியாளர் குழுக்கு ரூ 5 இலட்சம் வீதம் 56 குழுக்களுக்கு ரூ. 2.8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவும் தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் தாங்களாகவே தெரிவு செய்து கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக மாவட்ட ஆட்சியர் தலைமையில். மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் இன்று வேளாண் இயந்திரங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பல்வேறு முன்னனி நிறுவனங்களின் வேளாண் இயந்திரங்களை உழவர் உற்பத்தியாளார் குழுக்களின் பார்வைக்காக விலை பட்டியலுடன் காட்சிப்படுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் வேளாண் இயந்திரங்கள் விற்பனையாளர் மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழு கூட்டம் மாவட்ட ஆட்சி தலைவர் தலைமையில் நடைப்பெற்றது. அவ்வமையம் ஓவ்டிவாரு குழுவும் இயந்திரங்களின் விலை விவரத்தோடும தெரிவு செய்யப்பட்ட ஓவ்வொரு இயந்திரத்ததையும் எத்தனை இயந்திரம் வாங்க வேண்டும் என்ற புள்ளி விவரத்தோடு விற்பனையாளர்கள் மகேந்திரா & மகேந்திரா, செனாலிகா, ஜான்டிர், வி.ஜே.அக்ரோ சர்விஸ், சதர்ன் அக்ரோ, விவசாயி ஃபார்ம் சர்விஸ், அண்ணாமலை அக்ரோ கன்சல்டன்சி சர்விஸ், கிலாசிக் இன்ஜினியரிங் ஆகிய நிறுவனங்களிடம் நேரடியாக பேரம் பேசி விலை நிர்ணயம் செய்ய வேளாண்மை இணை இயக்குநர், தோட்டக்கலை துணை இயக்குநர், வேளாண் விற்பனை துணை இயக்குநர் மற்றும் வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் ஆகியோர் கொண்ட குழு முன்னிலையில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கூட்டம் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் திரு.பாண்டியன், துணை இயக்குநர் திரு.எபிநேசன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.முத்துதுரை, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.ராஜேஷ், வேளாண் விற்பனை உதவி இயக்குநர் திருமதி.திலகவதி மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள் கலந்துகொண்டனர்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**